செ.வெ.எண்: 33
தேதி: 15-06-18

# பத்திரிக்கை செய்தி

தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வரும் தொழில்முனைவோர்களுக்கு தேவையான தொழில் உரிமங்கள் மற்றும் அனுமதிகளை விரைவாக பெற்று தருவதற்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் ஒரு முனை தீர்வு குழு வாயிலாக விரைந்து பெற்று அளித்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதை எளிமையாக்குவதற்கு தொழில் துறை மூலம் ஒருங்கிணைந்த இணையதள வழி ஒற்றைச் சாளர தகவு (Single Window Portal) உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த தகவினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏற்ற வகையில் தேவையான மாற்றங்கள் செய்து, கூடுதலாக சுகாதாரத் துறையிடமிருந்து பெறவேண்டிய தடையில்லாச் சான்றிதழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரிடமிருந்து பெற வேண்டிய உரிமம் மற்றும் மின் வாரியத்திடமிருந்து பெற வேண்டிய குறைந்த அழுத்த மின் இணைப்பு ஆகியவற்றிற்கான சேவைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றை சாளர தகவு (http://easybusiness.tn.gov.in/msme) அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் மூலம்,தொழில் முனைவோர்கள் துறைகளிடமிருந்து பெற வேண்டிய உரிமங்கள், தடையில்லாச் சான்றுகள், ஒப்புதல்கள் போன்றவற்றை அந்தந்த அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமல் இணைதளம் மூலம் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

மேலும் தமிழ்நாடு அரசு, இளைஞர்கள் தொழில் தொடங்குவதற்காக செயல்படுத்திவரும் படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) மற்றும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஆகிய இருதிட்டத்தின்கீழ் பயனாளிகள் தங்களது விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை இணையதளத்தின் வாயிலாக, பதிவேற்றம் செய்து கொள்ள ஏதுவாக மேம்படுத்தப்பட்ட www.msmeonline.tn.gov.iun/uyegp மற்றும் (www.msmeonline.tn.gov/in/needs) தகவு அண்மையில் துவக்கி வைக்கப்பட்டது.

தொழில் வணிகத் துறையின் வாயிலாக மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து தொழில் முனைவோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புதிதாக, சமூக ஊடக வலைதளப் பக்கங்களான பேஸ்புக், டிவிட்டர் மற்றம் யூடியூப் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், தொழில் முனைவோாகளின் கருத்துக்கள் மற்றும் குறைகளை கேட்டறிந்து துறை அமல்படுத்தும் திட்டங்களை மாற்றியமைக்கவும் மேம்படுத்திடவும் இயலும்.

ஆகவே, தொழில் முனைவோர் இக்குழுவின் சேவைகளைப் பயன்படுத்திக் கொண்டு, எளிதாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களை தொடங்கி, அவற்றின் வாயிலாக தொழில் வளமும், பொருளாதார ஏற்றமும் பெற்று, வேலைவாய்ப்பை பெருக்க முன்வருமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. டி. என்.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

2/2

மாவட்ட ஆட்சித் தலைவர்
கோயம்புத்தூர்

14/6/18